கடந்தகாலத்தில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களையும் ஆராய்வதற்காக நிறுவப்படவுள்ள நீதிப்பொறிமுறையில் வெளிநாட்டு பங்குதாரர்களின் (நீதிபதிகள், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள்) பங்களிப்பை அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முற்றாக நிராகரித்தமையை ஒட்டி கையொப்பமிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், நிறுவனங்களும் வெகுவாக கவலையடைகின்றோம். மேலும், ஜனாதிபதி சிறிசேன இலங்கை நீதித்துறை மீதும் இலங்கையின் விசாரணை கட்டமைப்புக்கள் மீதும் தனது முழு நம்பிக்கையை தெரிவித்திருந்தார். ஜனாதிபதி சிறிசேனவின் இக்கூற்றுக்கள் இலங்கை அரசாங்கத்தின் துணை அனுசரணையுடன் ஐப்பசி 2015 இல் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் வைத்து நிறைவேற்றப்பட்ட பிரேரணையில் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு முற்றுமுழுதாகா முரணாக அமைகின்றன. ஐ. நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையானது இலங்கை நீதிப்பொறிமுறையொன்றில் பொதுநலவாய மற்றும் பிற நாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் விசாரணையாளர்கள் பங்குபற்றலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்தது. அண்மைய கிழமைகளில் வெளிவந்துள்ள ஜனாதிபதியினதும், அரசாங்கத்தின் ஏனைய அங்கத்தவர்களினதும் கூற்றுக்கள் அரசாங்கம் உண்மையாகவே தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான அரசியல் விருப்பை கொண்டுள்ளதா என்ற சந்தேகத்தை எழுப்புகின்றன.

இலங்கையில் அரசு கட்டமைப்புக்களும் அதிகாரிகளும் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட நிலையிலும், குற்றச்செயல்கள் புரிவோர் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாது தட்டிக்கழிக்கும் கலாச்சாரம் வெகு காலமாக நிலவி வரும் நிலையிலும் வெளிநாட்டு வல்லுனர்கள் வழக்கு விசாரணைகளில் வலுவாக பங்கு பற்றுதலானது அரசின் மீது குற்றசெயல்களினால் பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கை ஏற்படுவதற்கும், இலங்கையின் நிலைமாற்று நீதி பொறிமுறையில் சகல பங்குதாரர்களின் பங்குபற்றுதலுக்கும், அதன் மீது அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்குமான ஆரம்பப் புள்ளியாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய கூற்றுக்கள் பாதிக்கப்பட்டோருக்கும், சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை தவிடுபொடியாக்கி விடுகின்றன. மேலும், கடந்த காலங்களில் அரச விசாரணை கட்டமைப்புக்களான சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழுவிலும் (IIGEP), காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் ஆலோசனை சபையிலும் வெளிநாட்டு ஆலோசகர்களும் அவதானிகளும் அங்கம் வகித்துள்ளனர். இந்த பொறிமுறைகளின் தோல்வியானது நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதிலும், குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாத கவலையான நிலைக்கும் வழிவகுத்தன. இலங்கை மக்களுக்கு அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நேர்மையாக நிறைவேற்ற வேண்டுமெனின் சட்ட ஒழுங்கு சீர்குலைவும், குற்றங்களுக்கு தண்டனை பெற்றுத் தருதலும் அவசரமாக கருத்தில் கொள்ள வேண்டிய இன்றியமையாத விடயங்களாகும். மேலும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை சட்ட மீறல்களையும், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களையும் விசாரணை செய்வதற்கான தக்க திறனும், நிபுணத்துவமும் அத்தியாவசியம் என்று நாம் அடையாளம் காணும் வேளை, இலங்கையில் இவற்றின் (திறன்கள், நிபுணத்துவம்) வெற்றிடத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆகையினாலே, வெளிநாட்டு நிபுணர்கள் உள்நாட்டு பொறிமுறைகளில் பங்குபற்றக்கூடியவாறு இலங்கை அரசாங்கமானது உடனடியாக சீர்திருத்தங்களை முன்னெடுப்பது அத்தியாவசியமாகின்றது.

இலங்கை அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து ஜெனீவா பிரேரணைக்கு அமைவாக இலங்கையில் நிலைமாற்று நீதி பொறிமுறையை வடிவமைப்பதற்காக ஆலோசனைகளை ஆரம்பித்துள்ள நிலையில் ஜனாதிபதி சிறிசேனவின் இக்கருத்துக்கள் அந்த ஆலோசனை செயல்முறைகளை வெகுவாக பலவீனப்படுத்துவதுடன், அவ்வாலோசனைகளின் முயற்சிகளின் பயனை கேள்விக்குறிக்கு உள்ளாக்குகின்றன.